Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 360

வியாழக்கிழமை
21 நவம்பர் 2024

கார்த்திகை 06
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"எந்த அரசாங்கம் வந்தாலும் உந்த அவச்சாவுகளுக்கு முற்றுப்புள்ளி இல்லையோ?"

### பிரசவத்தின்போது உயிரிழந்த

# தாய், சிசுவுக்கு நீதிகோரி இரவிரவாகப் போராட்டம்!

**வீதிகளில் கொழுத்தப்பட்டன ரயர்கள்**

**கொட்டும் மழைக்குள் ஓயாது முன்னெடுப்பு**

**குவிக்கப்பட்டனர் கலகமடக்கும் பொலிஸார்**

**எவர் வாக்குறுதியையும் மக்கள் ஏற்கவில்லை**

### மன்னார் மருத்துவமனையில் உச்சப் பதற்றம்

**மன்னார், நவம்பர் 21**

**மன்னார் பொதுமருத்துவமனையில் மகப்பேற்றுக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்த தாய் மற்றும் சிசுவின் இறப்புகளுக்கு நீதி கோரி, கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று இரவிரவாக நூற்றுக்கணக்கான மக்கள் நீண்டநேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

11



## விசாரிக்க தனிக் குழு!

### மத்திய அமைச்சு உடன் நடவடிக்கை

மன்னார், நவ. 21

மன்னாரில் பிரசவத்துக்காகச் சேர்க்கப்பட்ட தாயும், அவர் வயிற்றில் இருந்த சிசுவும் உயிரிழந்த விடயத்தில், மருத்துவத் தவறு நிகழ்ந்துள்ளதா

09

## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

### தமிழர் தாயகத்தில் ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், நவ. 21

ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த அனைத்துப் போராளிகளுக்கும் வணக்கம் செலுத்தி நினைவு கூரும் மாவீரர் வாரம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

11

**சிந்துஜாவின் மரணம்**

## விசாரணையை துரிதப்படுத்துக

### பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு

மன்னார், நவ. 21

மன்னார் கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்த இளம் தாய் சிந்துஜா மன்னார் மருத்துவமனையில் உயிரிழந்த நிலையில், இந்த இறப்புத் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு நீதிமன்றம் பொலிஸாருக்குப் பணித்துள்ளது. சிந்துஜாவின் இறப்பில் மருத்துவத்

11

## மாங்குளத்தில் விபத்து; இரு இளைஞர்கள் பலி

முல்லைத்தீவு, நவ. 21

மல்லாவி, வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். மாங்குளத்திலிருந்து மல்லாவி நோக்கிச் சென்ற மோட்டார்சைக்கிளும்,

11





## பாதாளக்குழு சந்தேகநபர் நேற்று பரு. நீதிமன்றத்தில்!

### கடும் பாதுகாப்பால் பதற்றம்

யாழ்ப்பாணம், நவ. 21

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று போடப்பட்ட உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகளால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

11

# சோலர் இணைப்புகளுக்கான அனுமதியில் முறைகேடுகள்!

### ஜனாதிபதி செயலகத்துக்கு மீள முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சோலர் இணைப்புக்காக இலங்கை மின்சார சபையால் வழங்கப்படும் அனுமதியில் முறைகேடுகள் இடம்பெறுவதாக மீண்டும் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சோலர் இணைப்புக்காக விண்ணப்பிப்பவர்களின் வரிசை ஒழுங்குக்கு முரணாக அனுமதிகள் வழங்கப்படுதல், கையூட்டுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அனுமதி வழங்கப்பட்ட பாவனையாளர்களுக்கு மீற்றர் பூட்டுவதில் வேண்டுமென்றே இழுத்தடிப்புச் செய்தல் போன்ற குற்றச்சாட்டு

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அநுரவின் அமைச்சரவை; எதிர்க்கட்சி நற்சான்றிதழ்

கொழும்பு, நவ. 21

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை நியமனத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வரவேற்றுள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்று அதிகாரி சட்டத்தரணி அஜித் பி.பெரேரா, எண்ணிக்கையில் குறைந்தளவானவர்கள் அமைச்சரவையில் இடம் பிடித்துள்ளனர். இது வரவேற் கக்கூடிய விடயம். அதேபோல நிபுணத்துவம்மிக்கவர்கள் அமைச்சரவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். இதனையும் நாம் வரவேற்கின்றோம். நாடாளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முன்னின்று செயற்படுவோம். எண்ணிக்கையில் குறைவு என்றபோதிலும் பொறுப்பை நிறைவேற்றுவதில் பலமான எதிரணியாக அரசியல் நடவடிக்கை அமையும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## புதிய அரசுக்கு நாம் ஆதரவே

நாமல் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தைக் கொண்டுவர புதிய அரசாங்கம் ஒரு புதிய பாதையாக அமையும் இந்தப் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் ஒருபோதும் மறுப்புத் தெரிவிக்கமாட்டோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இந்த மாபெரும் வெற்றியை பயன்படுத்துங்கள்.

அத்துடன் புதிய அரசாங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு வழங்கும். - என்றார். (ச-இ)

## ரவியின் நியமனம் உத்தியோகபூர்வமே

ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு,நவ.21

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளமை உத்தியோகபூர்வ நடவடிக்கையாகவே கருதவேண்டும். வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்யமுடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நியமனம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அப்பாற்பட்ட விவகாரம்.

தேசியப்பட்டியலுக்கான பெயர் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டதால், வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பட்டியல் கட்சியின் பொதுச் செயலாளரால் கையளிக்கப்பட்டும், ஆணைக்குழு அதை உத்தியோகபூர்வ நடவடிக்கையாகவே கருதும். எந்தக் காரணத்துக்காகவும் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்யமுடியாது.

புதிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் ஷாமிலா பெரேரா, ரவிகருணாநாயக்கவின் பெயரைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியிருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த விடயம் கூட்டணிக் கட்சிகளுடன் கலந்துரையாடித் தீர்மானிக்கப்படவில்லை என்று கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார். (ச-இ)

## தெருவுக்கு வந்தது மகிழ்ச்சியளிக்கிறது

ஹரின் கிண்டல்

கொழும்பு,நவ.21

பொதுத்தேர்தலில் தோற்று தெருவுக்கு வந்தது மகிழ்ச்சியளிக்கின்றது. பலமான நாடாளுமன்றம் அமைந்துள்ளதால் தெருவில் இருந்துதான் அரசியலை முன்னெடுக்கவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பதுளை பொலிஸில் நேற்று வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்தபோது ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

நவம்பர் 11 ஆம் திகதி நாம் அணிந்திருந்த ரீ-சேர்ட்தான் பிரச்சினையாகியுள்ளது. நான் அணிந்திருந்த ரீ - சேர்ட்டில் சிலிண்டர் சின்னம் இருக்கவில்லை. இலக்கம் 10 மட்டும்தான் இருந்தது. அது மெஸ்ஸியின் ரீ-சேர்ட். மெஸ்ஸியின் இலக்கம் 10 என்பது முழு உலகுக்கும் தெரியும். நாட்டில் இரு சட்டங்கள்தான் இன்னும் செயற்படுகின்றதுபோல் தெரிகின்றது.

நாடாளுமன்றத்தில் அல்ல தற்போது வீதியில்தான் அரசியல் உள்ளது. அந்தவகையில் வீதியில் இருந்து எமது பயணம் ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## கைதிகளுக்கு உரிமை தருக

கொழும்பு, நவ.21

ஜனாதிபதித் தேர்தலிலோ, பொதுத்தேர்தலிலோ கைதிகளுக்கு வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. கைதிகளின் உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதியை சந்திப்பதற்கும் அனுமதி கோரியுள்ளது. இது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றையும் இந்த இயக்கம் தாக்கல் செய்துள்ளது. இந்த மனு 2025 மார்ச்சில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ச-25,6)



## ஹரினுக்குப் பிணை

கொழும்பு,நவ.21

முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பதுளை பொலிஸாரினால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் மௌன காலத்தில் தேர்தல் விதிமீறலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர் பதுளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரை அன்றைய தினமே நீதிமன்றில் முற்படுத்திய போது தலா 5லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார். (ச)

## தேசியப்பட்டியலில் ரஞ்சித் மத்தும!


கொழும்பு, நவ. 21

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் குறிப்பிடப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன.

அதற்கமைய தேசியப்பட்டியலில் அதன் தவிசாளர் இம்தியாஸ் பாகீர் மாக்கார், முன்னாள் எம்.பி.க்களான டலஸ் அழகப்பெரும, சுஜீவ சேனசிங்க, ஜீ.எல்.பீரிஸ், சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஆகியோரது பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இவர்களில் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய ஆசனங்களில் இம்தியாஸ் பாகீர் மாக்கார் மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரை நியமிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)



## இலங்கை வந்த வாஸ்கோடகாமா

கொழும்பு,நவ.21

வாஸ்கோடகாமா என்ற அதி சொகுசு பயணிகள் கப்பல் நேற்றுப் புதன்கிழமை காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

689 பயணிகள் மற்றும் 460 பணியாளர்களுடன் குறித்த கப்பல் இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகை தந்துள்ளது. இதுஜேர்மனி, பிரிட்டன் மற்றும் இந்தியாவிலிருந்து கொழும்பு, காலி மற்றும் திருகோணமலைக்கு செல்லும் பயணிகளை சுமந்து வந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உணவுப் பாதுகாப்புக்கு விவசாயிகளைக் காப்போம்

## விவசாய அமைச்சர் லால் காந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

**அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் அபிலாஷைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம். விவசாயிகள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என விவசாயத்துறை, கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது-

பொருளாதார ரீதியில் எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு முறையான கொள்கைத் திட்டங்களுடன் தீர்வு காணப்படும்.

பெரும்போக விவசாயத்துக்குத் தேவையான உரம் தடையின்றி விநியோகிக்கப்படும். அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டுமாயின் விவசாயிகளை வளப்படுத்தவேண்டும். தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு முறையான மற்றும் நடைமுறைக்குச் சாத்தியமான திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் நாடு என்ற ரீதியில் எதிர்கொண்டுள்ள சவால்களை எம்மால் வெற்றி கொள்ளமுடியும் - என்றார். (ச-இ)

## ரயில் மிதிபலகையில் பயணித்தவர் பலி!

கொழும்பு, நவ. 21

ரயில் மிதிபலகையில் பயணித்த இளைஞர் ஒருவர் ரயில் பாதைக்கு அருகில் உள்ள சமிக்ஞை கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார். பொல்கஹ வெலயிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற விரைவு ரயிலில் பயணித்த இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கணேமுல்ல தெனியவில் வசிக்கும் 21 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் ராகம மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஆங்கிலமொழிமூல கல்வி

## மாணவர் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, நவ.21

ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆங்கிலமொழிமூலம் கல்வி போதிப்பதற்குரிய ஆசிரியர்கள் இல்லை எனவும் இலங்கை அதிபர்கள் சங்கத் தலைவர் பியசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இதனால் மாணவர்கள் தொலைவிலுள்ள பாடசாலைகளை நாடிச்செல்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை தற்போது 765 பாடசாலைகளில் ஆங்கிலமொழிமூலம் கல்வி கற்பிக்கப்பட்டு வருவதாக முன்னாள் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-25, 6)



## ரவியின் வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, நவ. 21

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பத்தரமுல்லையிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு வெளியே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து புதிய ஜனநாயக முன்னணிக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றுக்கு ரவி கருணாநாயக்கவின் பெயரைத் தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டது. இந்த நிலையில் அவரது பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்புகள் வெளியாகிவரும் நிலையில், இந்தப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (ச-இ)

யாழ்ப்பாணத்தில்

## இரண்டு குடும்பங்கள் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

மழை அனர்த்தத்தினால் யாழ்ப்பாணத்தில் இரண்டு குடும்பங்களை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார். சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/315 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவரும், ஜே/328 கிராமஅலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இரண்டு குடும்பங்களின் வீட்டின் மீதும் மரங்கள் முறிந்து விழுந்ததால் வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-27)

## வங்காள விரிகுடாவில் காற்றழுத்தத் தாழ்வு!

யாழ்ப்பாணம், நவ. 21

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 23ஆம் திகதி காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கிலிருந்து வடமேற்கில் நகர்ந்து தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக மாற வாய்ப்புள்ளது. இன்று தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் காற்று சுழற்சி உருவாகக்கூடும். மேலும் இது மேற்கு, வடமேற்கு நோக்கி நகர்ந்து அடுத்த 2 நாள்களில் தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் .

இதேவேளை இலங்கையின் மேல், சப்ரகமுவ, வடக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப தினம் தெரியுமோ?

**வீட்டுக்கு வீடு வாசல் படிதான். எல்லாரும் வீட்டுக்கட்சிக்குள்ள மட்டும் தான் குத்துவெட்டு எண்டு நினைச்சுக் கொண்டிருக்கினம். ஆனால் எல்லாக் கட்சியளுக்குள்ளையும் புகைச்சல்கள், பிக்கல் பிடுங்கல்கள் இருக்குத்தான். ஆனால் வீட்டுக் கட்சி மட்டும் நடுறோட்டில நிண்டு சீலை உரியிறதும் தெரியாமல் சண்டை பிடிச்சு, ஊருக்கே தெரியப் படுத்திப் போடுவினம். மற்றக்கட்சியள் தங்கட சூத்தையள் வெளியில தெரியாமல் மறைச்சு வைச்சிடுவினம். அது சைக்கிளிலையும் இருக்கு. சங்கிலையும் இருக்கு. அவ்வளவு ஏன், திசைகாட்டியிலையும் இருக்கு.**

**திசைகாட்டியில என்ன சிக்கல்? எண்டு யோசிப்பியள். அந்தச் சிக்கல் இப்ப தொடங்கேலை. எலக்சன் அறிவிச்சு கொஞ்ச நாளிலையே தொடங்கிட்டுது. மற்றக் கட்சியளை விடவும் திசைகாட்டி வித்தியாசமானது. அவையள் ஆக்களை முன்னிலைப்படுத்தாமல், சின்னத்தையும், கொள்கையையும் தான் முன்னிலைப்படுத்தி வாக்குக் கேக்கிறவை. அதை மீறினால் அவ்வளவு தான். இந்த விசயம் யாழ்ப்பாணத்தில இடையால போய் சீற் வாங்கின சிலருக்குத் தெரியேலை. அவையள் வழக்கமான யாழ்ப்பாணத்து அரசியல்வாதியள் மாதிரி பேப்பர்களிலையும், நோட்டீஸ்களிலையும், பேஸ்புக்கிலையும், பொக்கெற் மீற்றிங்குகளிலையும் தங்களை மட்டுமே முன்னுரிமை குடுத்துப் பிரசாரம் செய்திருக்கினம். இது கட்சி மேலிடத்துக்குத் தெரியவர, கடுமையா 'டோஸ்'குடுத்திருக்கினம். ஆனாலும் அதுக்குப் பிறகும் ரண்டுபேர் திருந்தாமல் பழையபடி தங்கட புராணத்தை மட்டும் பாட, அவையை கட்சி ஒதுக்கி வைச்சிட்டு மிச்ச ஏழு பேரையும் தான் முன்னிலைப்படுத்தி, ஒன்டாப் பிரசாரம் செய்திருக்கு. யாழ்ப்பாணத்துக்கு அநுர வரேக்க கூட, இப்பிடி குழப்படி செய்த ரண்டு பேரையும் பின் சீற்றில தான் இருக்க இடம் குடுபட்டது.**

**ஆனால் திசைகாட்டிக்காரரே எதிர்பார்க்காத மாதிரி அவைக்கு மூண்டு சீற் யாழ்ப்பாணத்தில கிடைச்சுது. ஒரு பக்கம் அந்தக் கட்சிக்கு சந்தோசம், இன்னொரு பக்கம் தர்மசங்கடம். ஏனென்டால் குழப்படிகாரர் எண்டு கட்சி ஓரங்கட்டியிருந்த ரண்டுபேரும் விருப்பு வாக்கில ரண்டாம், மூண்டாம் இடத்தில இருந்திருக்கினம். அதால அவைக்கு சீற் குடுக்கிறதா, இல்லையா எண்டு குழப்பம். தேர்தல் முடிவுகளின்படி குடுக்காட்டி சட்டச்சிக்கல். குடுத்தால் அவையால பின்னடிக்குச் சிக்கல். கடுமையா யோசிச்ச பிறகு அவையை முதல் ஒரு வருசத்துக்கு எம்.பி.யா இருந்திட்டு, பிறகு ரிசைன் பண்ணி புது ஆக்களுக்கு அந்தப் பதவியைக் குடுக்கச் சம்மதிக்கிற கடிதம் ஒண்டு வாங்கிப்போட்டுத்தான் அவைக்கு எம்.பி. பதவி குடுத்தவை எண்டு ஒரு கதை ஓடித்திரியுது. அப்பிடி சுழற்சி முறையில எல்லாருக்கும் எம்.பி. பதவி குடுத்து, அவை மூலமா சனத்துக்கு நல்லது செய்தால் அடுத்தமுறை ஆறு சீற்றையும் அள்ளலாம் எண்டதும் திசைகாட்டியின்ர பிளானாம். அவங்கள் அப்பிடி தொலைநோக்கோடு செய்யிறாங்கள், எங்கடையள் இன்னும் நடுறோட்டில கிடந்து உருண்டு பிரளுதுகள்.**

-பட்சி

padsi@uthayan.com

# மெய்யியல்!

சிவகுமார் நிரோசன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மெய்யியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கொள்கை வகுப்பாளர்களின் கோட்பாடு

ஆண்டுதோறும் நவம்பர் மூன்றாவது வியாழன் மெய்யியல் தினமாகும் என 2002ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அறிவித்தது. இந்தவகையில் 2024ஆம் ஆண்டுக்கான உலக மெய்யியல் தினம் இன்றாகும். இந்த ஆண்டின் மெய்யியல்; தினத்துக்கான கருப்பொருள் 'உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான எதிர்காலத்துக்கான மெய்யியல்' என்பதாகும். அனைவருக்கும் சொந்தமானதும் செழிப்பானதுமான உலகத்தை உருவாக்குவதில் மெய்யியலின் வகிபங்கை எடுத்துக்காட்டுவதே இந்தக் கருப்பொருளின் நோக்கமாகும். இது சமத்துவமின்மைகளைக் களைந்து, பல்வேறு குழுக்களிடையேயும் நல்லிணக்கத்தை வளர்த்து, சமூக இடைவெளிகளைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இந்தத் தினமானது உலகெங்கிலும் உள்ள மக்கள் தமது வாழ்க்கையில் மெய்யியல் சிந்தனைகளின் பெறுமதியை ஆராய்வதற்கான ஓர் அழைப்பாகும். இந்த சிறப்பான நாள் வாழ்க்கை, பிரபஞ்சம் மற்றும் இந்த உலகில் நமக்கான இடம் என்பன பற்றிய அடிப்படைக் கேள்விகளைப் பற்றி சிந்திக்க அனைவரையும் ஊக்குவிக்கிறது.

### ஞானம் என்பது வகுப்பறைக்கல்ல

வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகளைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க மெய்யியல் உதவுகிறது. இது உண்மை, ஒழுக்கம், இருப்பு மற்றும் நீதி போன்ற மனிதவாழ்வின் இன்றியமையாத அம்சங்கள் பலவற்றையும் ஆராய்கின்றது. நம்மையும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தையும் நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது. அவ்வாறெனின், மெய்யியல் என்பது அறிஞர்களுக்கு மட்டுமானதல்ல அனைவருக்குமானது! ஏனெனில் மெய்யியலானது கல்விசார் விவாதங்களுக்கு அப்பாற்பட்டு நாம் எவ்வாறு வாழ்கிறோம் தொடர்பு கொள்கிறோம் உலகளாவிய சவால்களை எதிர்கொள்கிறோம் போன்ற விடயங்களை மைய உரையாடல்களாகக் கொள்கின்றன. வினாக்களைத் தொடுக்கவும், சிந்தனைகளை விமர்சன ரீதியாக அணுகவும், பிரச்சினைகளுக்குப் பயனுறுதிமிக்க தீர்வுகளைக் கண்டறியவும் அது எமக்குக் கற்றுக்கொடுக்கிறது. அதாவது ஞானம் என்பது புத்தகங்கள் அல்லது வகுப்பறைகளுக்கு மட்டும் அல்ல என்பதை உலக மெய்யியல் தினம் நமக்கு நினைவூட்டுகிறது. இது அன்றாட உரையாடல்களிலும், பிரச்சினைகளை நாம் தீர்க்கும் விதத்திலும், மற்றவர்களை எப்படி நடத்துகிறோம் என்பதிலும் இருக்கிறது.

திறனாய்வு சிந்தனையை வளர்ப்பதன் மூலம் தர்க்கரீதியாக சிந்திக்கவும், ஊகங்களைக் கேள்விக்குட்படுத்தவும் ஊக்குவித்தல், வெவ்வேறு நம்பிக்கைகளையும் விழுமியங்களையும் ஆராய்வதன் மூலம் மற்றவர்களை நன்கு புரிந்துகொண்டு மதிப்பளிப்பதற்கான சகிப்புத்தன்மையை ஊக்குவித்தல், மெய்யியல் கருத்துகள், சட்டங்கள் மற்றும் ஒழுக்கவிதிகள் ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு வாழ்க்கைக்கு வழிகாட்டுதல், முரண்பாடுகளைத் தீர்க்கவும் நியாயமான தீர்வுகளைக் கண்டறியவும் உரையாடல் மூலம் சமாதானத்தையும் நீதியையும் கட்டிவளர்த்தல் என்பன சமூகங்களைக் கட்டமைப்பதற்கான மெய்யியலின் பங்களிப்புகளில் ஒருசிலவாகும்.

### எங்கும் எதிலும் மெய்யியலின் தேவை

இதற்கும் மேலாக, நியாயமானதும் நிலையானதுமான சமூகங்களை உருவாக்குவதில் மெய்யியல் முக்கியமான பங்கு வகிக்கிறது. மெய்யியல் பக்கச்சார்புகளைச் சவாலுக்குட்படுத்தி பாகுபாடு மற்றும் சமத்துவமின்மையின் வேர்களை ஆராய்வதன் மூலம் சமத்துவத்தை ஊக்குவிக்கிறது. நாம் வாழும் பூமி மற்றும் எதிர்கால சந்ததியினர் மீதான எமது பொறுப்புகளைப் பற்றிச் சிந்திக்க மெய்யியல் விசாரணைகள் எம்மைத் தூண்டுகின்றன. பல்வேறு கலாசாரங்கள், நம்பிக்கைகள் மற்றும் சமூகப் பின்னணி கொண்ட மக்களிடையே உள்ள இடைவெளிகளையும் பிளவுகளையும் குறைப்பதற்கான உரையாடல்களை விருத்தி செய்ய மெய்யியல் உதவுகிறது. மனித குலத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் நன்மை பயக்கும் முடிவுகளை எடுப்பதில் மெய்யியல் கோட்பாடுகள் தனிநபர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு வழிகாட்டுகின்றன.

உலக மெய்யியல் தினம் 2024, நாம் ஒருவரையொருவர் எவ்வாறு நடத்துகிறோம் என்பதையும், நாம் பகிர்ந்து கொள்ளும் உலகத்தையும் மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசரத் தேவையை நமக்கு நினைவூட்டுகிறது. மெய்யியல் சிந்தனைகளைத் தழுவுவதன் மூலம், சமத்துவமின்மை, காலநிலை மாற்றம் மற்றும் சமூகப் பிளவு போன்ற சவால்களை எதிர்கொள்ள நாம் ஒன்றிணைந்து செயற்பட முடியும். இந்தத் தினத்தைக் கொண்டாடுவது, ஆழ்ந்து சிந்திக்கவும், மற்றவர்களின் கருத்துகளுக்குச் செவிமடுக்கவும், மேலும் சிந்தனைமிக்க மற்றும் இணக்கமான உலகத்தை உருவாக்க ஒன்றாகச் செயற்படவும் நம்மை ஊக்குவிக்கும். மெய்யியலின் காலத்தால் அழியாத மதிப்பையும், மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் அதன் ஆற்றலையும் போற்ற இந்த நாளைப் பயன்படுத்துவோம்.


# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

### அதிபரின் வாழ்த்துச் செய்தி

"செறிவு அறிந்து சீர்மை பயக்கும் அறிவு அறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்"

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கு உதாரண புருஷராக விளங்குபவர் திருவாளர் மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன் ஆசிரியர் அவர்கள். தன்னுடைய அறுபதாண்டு அகவையை நிறைவு செய்கின்ற ஆசிரியர் அவர்கள் ஒப்பற்ற புலமையும் ஆழ்ந்தகன்ற நுண்ணறிவும் சான்றாண்மைப் பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்றவர். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இணைந்த கணித பாட ஆசானாக விளங்கிய அவர் 2017 ஆம் ஆண்டில இருந்து எமது கல்லூரியில் இணைந்து தன் அரிய சேவையை ஆற்றி வந்தவர்.

எப்பொழுதும் அமைதியான கனிவான பேச்சும் ஆழ்ந்த சிந்தனைத் தெளிவுடன் உரையாடும் பாங்கும் மாணவர்களிடம் தனித்துவமான மரியாதையையும் மதிப்பையும் அவருக்குப் பெற்றுத்தந்தது. இதனால் மாணவர்களின் கற்றல் கற்பித்தலுக்கு அப்பால் ஒழுக்க விழுமியங்களிலும் கூடிய கவனத்தை செலுத்தி மாணவர்களை சிறப்பாக வழி நடாத்திவந்தார். "மகிழகம்" என்னும் மாணவர்கள் ஆலோசனை வழிகாட்டல் பிரிவின் பொறுப்பாசிரியராக விளங்கி மாணவர்களை வழி நடாத்தியதோடு மட்டுமன்றி மாணவர் நலனோம்புத் திட்டங்களிலும் அதிக அக்கறை செலுத்திவந்தார். ஆசிரியரின் ஆழ்ந்த அறிவுப் புலமையும் அனுபவமும் எம் மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமே. திரு.ம.கோபாலகிருஷ்ணன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் இன்னும் பல்லாண்டுகள் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் இறையருள் துணைபுரியும் என்ற நம்பிக்கையுடன் எனது மனம் நிறைவான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

திரு.சி.இந்திரகுமார்,
அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

### ஆசிரியர் வட்டத்தின் வாழ்த்துச் செய்தி

அவர்களின் ஆசிரியப்பணியில் 31 வருடங்களையும், எமது கல்லூரியில் சுமார் 7 வருடங்களும் திரு.மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன் ஆசிரியர் அவர்களின் ஆசிரியப்பணியில் 31 வருடங்களையும், எமது கல்லூரியில் சுமார் 7 வருடங்களும் சேவையாற்றியவர். பாடசாலைகளின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றில் அக்கறை செலுத்தியவர். மாணவர்கள் இணைந்த கணித பாடத்தில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகம் செல்ல காரணமாக இருந்தவர். எமது கழகத்தின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தவர். இவரது ஓய்வுகாலம் மகிழ்வாகவும் சிறப்பாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.மா.நேரு
தலைவர், ஆசிரியர் வட்டம்
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.




திரு. மயில்வாகனம்
கோபாலகிருஷ்ணன்
(B.Sc, PGDE (Merit)

**சேவை விபரம்**

- யா / இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்
  11.01.1993 – 03.01.2007
- யா / திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்
  04.01.2007 – 16.10.2017
- யா / யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்
  17.10.2017 – 14.11.2024

[illegible] ஆசிரியர் வட்டம், யாழ் மத்திய கல்லூரி

### கடமையில் கண்ணியமானவர்

திருவாளர் மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன் அவர்கள் தனது 31 வருட கால ஆசிரியக் கல்விப்பணியாற்றி ஓய்வுபெறும் நன்னாளில் அவரின் அர்ப்பணிப்பான சேவையினை பாராட்டுவதில் பெருமகிழ் வடைகின்றேன். யா / இராமநாதன் கல்லூரியில் 1993 ஆம் ஆண்டில் ஆரம்பித்த அவரின் ஆசிரியப்பணி யா/ திருக்குடும்ப கன்னியர் மடத்தில் தொடர்ந்து யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் இன்றுடன் நிறைவடைகின்றது. இணைந்த கணிதபாட ஆசிரியராகவும் இடைநிலை வகுப்புகளில் கணித பாடத்தினை ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதிலும் சிறந்த தேர்ச்சி உடையராக விளங்கினார். ஆசிரியப்பணியினை நேர்மையாகவும் மாணவர் நலன் சார்ந்தும் ஆற்றியவராக விளங்கினார். நேரமுகாமைத்துவத்தினை சிறந்த முறையில் கடைப்பிடித்த ஆசிரியராக அவரை நான் காண்கின்றேன். கோபாலகிருஷ்ணன் ஆசிரியர் ஓய்வுகாலம் சிறப்பாகவும் மகிழ்வாகவும் அமைய இறைவன் ஆசி கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து மணிவிழா வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.சு.சரவணபவன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கணிதம்)
மாகாணக் கல்வித்திணைக்களம், வடமாகாணம்.

### யாழ்ப்பாணம் வலயக்கல்வி பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அகவை அறுபதை அடைந்து ஆளுமைப்பொலிவில் மிளிர்ந்து மணிவிழா காணும் திரு. மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன் ஆசிரியர் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஏழாலையைச் சேர்ந்த மயில்வாகனம் - அமராவதி தம்பதிகளின் புதல்வனாக 1964.11.14ல் அவதரித்து தனது ஆரம்பக் கல்வியை வலிகாமம் / ஏழாலை மகா வித்தியாலயத்திலும் உயர்நிலைக் கல்வியினை வலிகாமம்/ யூனியன் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். வலிகாமம் மண்ணில் பிறந்து விஞ்ஞானமாணி பட்டத்தினை ஆங்கில மொழியில் பெற்று கல்வி துறையில் டிப்ளோமா பட்டத்தினையும் பெற்று பணியில் உயர்வு காட்டி யாழ் வலயத்தின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த 7வருடங்களாக இணைந்த கணித பாடத்தினை சிறப்பாக கற்பித்துள்ளமைக்கு சான்றாக 2023ஆம் ஆண்டிற்கான க.பொ.த உ/த பரீட்சை பெறுபேற்றில் 81%இணைந்த கணித பாடத்தில் சித்தி பெற்றுள்ளமை அவரின் முயற்சியின் மிகப்பெரிய வெற்றியாகும். ஆசிரியராக மூன்று பாடசாலைகளில் கல்வி பணிசெய்த காலங்கள் 32 வருடங்களைக் கடந்துவிட்ட அனுபவ முதிர்ச்சி பணிநிறைவில் பார் போற்றும் அளவு வியாபித்துள்ளது. கம்பீரமான தோற்றமும் மனதில் வெள்ளை உள்ளமும் கொண்ட திரு.மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஓய்வுகாலத்தில் சந்தோசமாக நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

திருமதி ஜமுனா ராஜசீலன்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## மாற்றத்தின் நாளாகட்டும்!

பொதுத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து இலங்கையின் 10ஆவது நாடாளுமன்றம் இன்று முறைப்படி பதவியேற்கவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக்கட்சி என இதுவரை மாறிமாறி ஆட்சியமைத்த அரசாங்கங்கள் மீதான எதிர்ப்பு மற்றும் விரக்தியின் வெளிப்பாடாகவே கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன. இதுவரை வேறு எந்தக் கட்சிக்கும் வழங்காத அளவுக்கு அறுதிப் பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் அள்ளிக் கொடுத்ததைத் தொடர்ந்து இன்றையதினம் ஆளும் கட்சியில் அமரமுடியாத அளவுக்கு ஆசனப் பற்றாக்குறையுடன் இன்றைய அமர்வை எதிர்கொள்கின்றது தேசிய மக்கள் சக்தி.

புதிய அரசமைப்பு உருவாக்கம், ஊழலற்ற ஆட்சி, விவசாயத் தன்னிறைவு, சுதந்திரமான மீன்பிடி, அதிகரிக்கப்படவேண்டிய தற்சார்புப் பொருளாதாரம், தோட்டத் தொழிலாளர்களுக்கான ஊதியம், கறுப்புப் பண மீட்பு, கொள்ளையிடப்பட்ட சொத்துகளை மீளப் பெறுதல், வரிக்குறைப்பு, கடன் மறுசீரமைப்பு என ஏகப்பட்ட பொறுப்புகள், எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலேயே மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் இன்று பொறுப்பேற்கின்றனர். அதிலும், தேசிய மக்கள் சக்தியின் அனைத்து நல்ல திட்டங்களுக்கும் எந்தவொரு தயக்கமும் இல்லாமல் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்றும், புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் முழுமூச்சாகச் செயற்படுவோம் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருக்கின்றது. புதியதொரு அரசியல் கலாசாரம் கட்டியெழுப்பப்படும் என்றும் அது தெரிவித்திருக்கும் நிலையில், 10ஆவது நாடாளுமன்றம் இலங்கையில் பல திருப்பங்களை ஏற்படுத்த வாய்ப்பிருப்பதாகவே நம்பப்படுகின்றது.

இதற்கு முன்னர், எப்போதெல்லாம் அரசியல் தீர்வுக்கான ஒரு தேடல் ஆரம்பிக்கின்றதோ அப்போதெல்லாம் முட்டுக்கட்டை போட்டவர்கள் இம்முறை முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். வந்திருக்கும் ஓரிருவர்கூட தேசியப்பட்டியல் எனும் பின்கதவால் வந்தவர்கள்தான். அநுரவின் வெற்றியலை இன்னும் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கையில் சூட்டுடன் சூடாக நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடவேண்டிய பெரும் பொறுப்பு அவருக்கு மிகக் கனதியாக இருக்கவே செய்கின்றது. வடக்குக்கு எதிரான தெற்கின் அரசியலையும், தெற்குக்கு எதிரான வடக்கின் அரசியலையும் ஒரே புள்ளியில் இணைத்த முதலாவது தலைவராக வரலாற்றில் இடம்பிடித்த ஜனாதிபதி அநுர, தனது அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றத் தவறுவாராயின், 'அறுதிப்பெரும்பான்மையை வைத்திருந்தும் மக்கள் மன்றில் தோற்றவர்' என்ற மாபெரும் பழிச்சொல்லுக்கு ஆளாவார். அத்துடன், பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத தலைவராகவும், தீர்க்க விரும்பாத தலைவராகவும் வரலாற்றில் இடம்பிடிப்பார்.

எல்லாவற்றையும்விட, விசேட தேவையுடைய பிரதிநிதித்துவம் உட்பட அனைத்து விடயங்களையும் நாடாளுமன்றத்தில் பார்த்துப் பார்த்துச் செயற்படுத்தும் அநுர அரசாங்கம், ஆதிக்குடிகளையும் முஸ்லிம்களையும் நட்டாற்றில் கைவிட்டுள்ளதாகவே தெரியவருகின்றது. எண்ணிக்கையில் ஆதிக்குடிகள் மிகச் சொற்பமானவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்கும் ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கி அல்லது ஓர் தனியான அமைச்சின் மூலம் அவர்களின் விடயங்களைக் கவனித்தேனும், ஆதிக்குடிகளின் துயர்துடைக்க ஜனாதிபதி முன்வரவேண்டும். ஏனெனில் அவர்களும் இந்த நாட்டின் மக்களே. அவர்களுக்கும் 'இலங்கையர்களாக' வாழ்வதற்கு அத்தனை உரிமைகளும் உள்ளன. அதேபோல், முஸ்லிம் ஒருவருக்கும் அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவேண்டும் எனவும் அந்த இனத்தில் இருந்து பலமாகக் குரலெழத் தொடங்கியுள்ளது. அமைச்சரவையில் ஓர் இனத்தை மட்டும் புறமொதுக்கியதாக இருப்பது அபத்தம்தான். எனவே அந்தக் குறைகளையும் களைந்தால், சகல மனங்களையும் வென்ற அரசாங்கமாக மாற வாய்ப்புண்டு.




# பொலிஸ் சேவையில் இனி அரசியல் இல்லை

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 21**

**முன்னைய அரசாங்கங்களின் கீழ் பொலிஸ் திணைக்களம் அரசியல்மயப்படுத்தப்பட்டது. இனிஅந்த நடவடிக்கைக்கு முடிவு கட்டப்படும். இலஞ்ச ஊழலை ஒழிப்பதே முன்னுரிமை விடயமாகக் காணப்படும்.**

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஒழுக்கமான, நேர்மையான, சட்டத்தை மதிக்கும் பொலிஸ் துறையை உருவாக்கவேண்டியது அவசியம். பொலிஸ் கட்டமைப்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். தேர்தலுக்கு முன் உறுதியளித்தபடி, சட்டம், நீதி, நேர்மை நிலைநாட்டப்படும். பொலிஸார் தங்களின் சேவையை பக்கச்சார்பற்ற விதத்தில் அரசியல் தலையீடு இன்றி முன்னெடுக்கவேண்டும். அதற்கான சூழலை உருவாக்குவோம் - என்றார். (ச-6)

## ஆசிய வங்கியால் 200 மில். டொலர்

கொழும்பு, நவ. 21
இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.
இலங்கை அரசாங்கத்தின் நிதித்துறையை மேலும் வலுப்படுத்துவதற்காக இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## உத்தியோகபூர்வ இல்லங்களை 30 எம்.பி.க்களே ஒப்படைப்பு

கொழும்பு, நவ,21
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களிடம் அவர்களது உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட காலக்கெடு நேற்றுப் புதன்கிழமையுடன் முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் 108 நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களில் 30 பேர் மட்டுமே இதுவரை தமது உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைத்துள்ளனர் என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ரொஷானி குணதீர தெரிவித்துள்ளார். (ச-25, 6)

## இராஜாங்க அமைச்சர்கள் இனி இருக்கமாட்டார்கள்



கொழும்பு, நவ. 21
புதிய அரசாங்கத்தினால் எந்தவொரு இராஜாங்க அமைச்சரும் நியமிக்கப்படமாட்டார்கள் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அடுத்த ஓரிரு தினங்களில் 26- 28 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள். தேர்தலுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளவாறு தமது கட்சி இராஜாங்க அமைச்சர்களை நியமிக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## பாடசாலைக் கொடுப்பனவு மாணவர்கள் தெரிவு

கொழும்பு, நவ. 21
பாடசாலை புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்யமுடியாத பிள்ளைகளுக்கு அரசாங்கத்தால் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.
அதற்கமைய, கொடுப்பனவு வழங்குவதற்குத் தகுதியான மாணவர்களின் தகவல்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

22.11.2024

வெள்ளிக்கிழமை - கார்த்திகை - 07

சுபநேரம் : 06.10 - 07.40

ராகுகாலம் : 10.40 -12.10

**நாளொரு நல்வார்த்தை**

**இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது. மரங்கள் என் கோயில்கள். காடுகள் என் தேவாலயங்கள்.**


-மிகைல் கோபர்ச்சேவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அழகசுந்தரம் கிருபாகரன்

(பிரபல தொழிலதிபர் - கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை உரிமையாளர்)



பதுளை மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும் ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அழகசுந்தரம் கிருபாகரன் நேற்றுமுன்தினம் (19.11.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம் மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆசீர்வாதப்பர் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(CR.43740) (n-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**மலர்வு** **03.06.1980** — **உதிர்வு** **19.11.2024**

# மரண அறிவித்தல்

## சேது (சேதா) சிறிகாந்தன் (BA)



அச்சுவேலி, வளலாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ். கில்னர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சேது (சேதா) சிறிகாந்தன் நேற்று (20.11.2024) புதன்கிழமை அதிகாலை காலமானாார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன் (ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்) - பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகளும், சிறிகாந்தனின் (DO, R/ACLG Office -Jaffna) அன்பு மனைவியும், ஹம்சிகா (A/L - 2024, யா / அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி), துதீசன் (தரம் - 10, யா/யாழ் இந்துக்கல்லூரி), அகீசன் (தரம் -7, யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காவேரி வீரசிங்கம் (கனடா), கங்காதரன் (கனடா), யமுனா கருணாநிதி (கனடா), சிவதரன் (கனடா), பவானி ஞானேந்திரன் (அவுஸ்ரேலியா), திருவேணி அன்ரன் கமிலஸ் (DO, பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**424 /1/1,**
**(14) கில்னர் ஒழுங்கை,**
**K.K.S. வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**சு.சிறிகாந்தன் (ராஜா)**
**கணவன்.**

**தோற்றம்** **01.01.1973** — **மறைவு** **20.11.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம், மீன்பிடியை மேம்படுத்தல் அவசியம்

## வடக்கு மாகாண ஆளுநர் சீனத் தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளை மேம்படுத்துவது அவசியம் என்றும், அதற்குச் சீனா உதவவேண்டும் என்றும் சீனத்தூதுவர் ஷி ஷென் ஹொங்கிடம் வடமாகாண ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில், சீன அரசாங்கத்தால் 12 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷி ஷென் ஹொங் இந்தக் காசோலையை கையளித்ததுடன், வடக்கு தொடர்பான பல்வேறு விடயங்கள்.தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார். இதன்போதே, வடக்கின் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகளின் அடுத்தகட்ட வளர்ச்சி தொடர்பில் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட நாகலிங்கம் வேதநாயகனுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்த இலங்கைக்கான சீனத்தூதுவர், பிரதேசத்தின் அபிவிருத்திக்குத் தமது பங்களிப்பு இருக்குமென உறுதியளித்தார். வடபகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அவதானிக்கையில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தில் ஊழல் ஒழிப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டினார். வடபகுதி விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினையாக அவர்களின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குரிய வாய்ப்புகள் மேம்படுத்தப்படவேண்டியதன் அவசியம் தொடர்பிலும், வடக்கில் பிடிக்கப்படும் மீன்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை உற்பத்திப் பொருள்களாக ஏற்றுமதி செய்யப்படவேண்டிய அவசியம் தொடர்பிலும் ஆளுநர் வலியுறுத்தினார். இதற்கு சீனாவின் உதவிகளையும் ஆளுநர் கோரினார். (அ-ம-66-125-26-20)

**வீடு வாடகைக்கு உண்டு**

கொக்குவில் முதலி கோயிலடியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 072 445 5458, 078 890 9013

# கேள்விஅறிவித்தல்

## கரைதுறைப்பற்றுபிரதேசசபை,முல்லைத்தீவு சபைநிதி 2024

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது, சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. **தலைவர், பெறுகைக்குழு, உள்ளூர் அதிகார பெறுகைசபை, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்தஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காககோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டடநிர்மாணதுறையில் நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. தொலைபேசி:-024-3243542 தொலைநகல்: 0212290001,**ல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 21.11.2024 ம் திகதியிலிருந்து 03.12.2024 வரை காலை 09.00 மணி முதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் பூரணமான கேள்விஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 21.11.2024 ம் திகதியிலிருந்து 03.12.2024 வரை வேலைநாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 04.12.2024 ம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது–21.Jan.2025) நாட்கள் வரையும் Improvement of Kumulamunai Public Market, Improvement of Kokuthoduvai Public Market, Improvement of Alampil Public Market செல்லுபடியாகும். இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்துமூன்று–04.Feb.2025) நாட்கள் வரையும் Mulliwaikkal Tourism center Fencing Work செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(01)02/03/C.F/ Maintenance/06/2024 | Improvement of Kumulamunai Public Market | 0.847 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 13,000.00 | 18/Feb/ 2025 |
| 2 | NP/14/44(01)02/03/C.F/ Maintenance/07/2024 | Improvement of Kokuthoduvai Public Market | 0.889 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 14,000.00 | 18/Feb/ 2025 |
| 3 | NP/14/44(01)02/03/C.F/ Maintenance/08/2024 | Improvement of Alampil Public Market | 0.847 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 13,000.00 | 18/Feb/ 2025 |
| 4 | NP/14/44(01)02/03/DE.R E/Capital/07/2024 | Mulliwaikkal Tourism center Fencing Work | 3.389 | 63 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 51,000.00 | 04/Mar /2025 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 02.12.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு. 21.11.2024**

(CR/43741) J-1

# 83 % மழைவீழ்ச்சி வவுனியாவில் பதிவு

வவுனியா,நவ.21

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 19 வரை 83 வீதமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வளிமண்டல நிலையப் பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆண்டுக்கு சராசரியாக 1200 தொடக்கம் 1400 மில்லி மீற்றர் அளவிலேயே மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறுகின்றது.

இங்கு ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் 994.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. வருகின்ற 40 நாள்களுக்குள் 300 மில்லிமீற்றர் அளவிலான மழைவீழ்ச்சியே பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நவம்பர் இறுதி மற்றும் டிசெம்பர் மாதங்களில் மழை அதிகமாகக் காணப்பட்டாலும் சராசரி மழைவீழ்ச்சியாகவே காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-22-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்
# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
# சபை நிதி - 2024

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை சபை நிதியினை கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களிற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தேசிய போட்டிக்கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019. ஆந் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 21.11.2024ம் திகதியிலிருந்து 04.12.2024 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 15.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 05.12.2024 ம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி யானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | **Renovation of Chankanai area roads (Murugamoorthy Kovil Veethy , Ilakady Lane)** NP/14/41(17)/02/CF(Maintenance) /01/2024 | 2.351 | 45 நாட்கள் | C8 & C7 வீதி புனரமைப்பு | 63 நாட்கள் | 06.02.2025 | Rs. 24,000 .00 | 06.03.2025 |
| 02 | **Renovation of Kenykadawai road** NP/14/41(17)/02/CF(Maintenance) /02/2024 | 0.674 | 45 நாட்கள் | C9 & C8 வீதி புனரமைப்பு | 49 நாட்கள் | 23.01.2025 | Rs. 7,000. 00 | 20.02.2025 |
| 03 | **Renovation of Kalaivempady road** NP/14/41(17)/02/CF(Maintenance) /03/2024 | 1.618 | 45 நாட்கள் | C9 & C8 வீதி புனரமைப்பு | 49 நாட்கள் | 23.01.2025 | Rs. 17,000 .00 | 20.02.2025 |
| 04 | **Renovation of Thikkirai road** NP/14/41(17)/02/CF(Maintenance) /04/2024 | 1.809 | 45 நாட்கள் | C9 & C8 வீதி புனரமைப்பு | 49 நாட்கள் | 23.01.2025 | Rs. 19,000 .00 | 20.02.2025 |
| 05 | **Renovation of Kulanai veethy and Kulanai first lane** NP/14/41(17)/02/CF(Maintenance) /05/2024 | 1.339 | 45 நாட்கள் | C9 & C8 வீதி புனரமைப்பு | 49 நாட்கள் | 23.01.2025 | Rs. 14,000 .00 | 20.02.2025 |
| 06 | **Reconstruction of Solid waste Management unit at Araly.** NP/14/41(17)/02/CF(Maintenance) /06/2024 | 4.718 | 45 நாட்கள் | C8 & C7 வீதி புனரமைப்பு | 63 நாட்கள் | 06.02.2025 | Rs. 48,000 .00 | 06.03.2025 |
| 07 | **Construction of Cover Slab at Chankanai fish market** NP/14/41(17)/02/CF(Maintenance) /07/2024 | 1.262 | 45 நாட்கள் | C9 & C8 வீதி புனரமைப்பு | 49 நாட்கள் | 23.01.2025 | Rs. 13,000 .00 | 20.02.2025 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 27.11.2024 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம். 21.11.2024

(CR/43743) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுமுகநாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், நவ. 21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆறுமுக நாவலர் குருபூசை விழா நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆறுமுகநாவலர் குருபூசையைத் தொடர்ந்து இணுவையூர் ஞான ஏந்தல் மா. ந.பரமேஸ்வரனின் திருமுறை சமர்ப்பணமும், ஆறுமுகநாவலர் என்னும் விடயப்பொருளில் ஸ்ரீநந்தகோபன் அணிகளின் கதாப்பிரசங்கமும் மாணவர்களின் திருப்புகழ் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (ச-25)

## வாசிப்புமாத பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.21

சுன்னாகம் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன்னாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி கௌரி விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இராமநாதன் கல்லூரியின் அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம், கௌரவ விருந்தினராக வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன், சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் திருமதி ரவீந்திரகலா ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-22-66)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.21

கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா அதிபர் த. ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் பாடசாலை சிவனேசன் கலையரங்கில் இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவையாளர் லயன் கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டிக் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி பாலகிருஷ்ணன் கலைவாணி, பாடசாலை முன்னாள் ஆசிரியர் சசிகலா சூரியகுமாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-22)

## சிறீரங்கா சி.ஐ.டி.யில் முன்னிலை

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிறீரங்கா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையானார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள சுஜீவ சேனசிங்கவின் V-8 வாகனம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் அங்கு முன்னிலையானார். (ச-இ)



# ரஷ்யாவால் அச்சநிலை; அமெ. தூதரகம் பூட்டு!

கீவ், நவ. 21

**ரஷ்யாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுதத் தாக்குதல் அச்சம் காரணமாக, உக்ரைனின் தலைநகர் கீவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டுள்ளது.**

அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, ரஷ்யாவுக்குள் உக்ரைனால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால், 'இந்தப் போரில் அமெரிக்கா நேரடியாகப் பங்கெடுத்துள்ளதாகக் கருதுகின்றோம்' என்று தெரிவித்துள்ள ரஷ்யா, பதிலடி கொடுக்கத் தயாராகி வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உக்ரைனின் தலைநகர் கீவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டுள்ளது.

'மிகுந்த எச்சரிக்கையுடன் தூதரகம் மூடப்படுகிறது. தூதரக ஊழியர்கள் தங்குமிடமித்தில் இருக்க அறிவுத்தப்படுகிறார்கள். வான்வழித் தாக்குதலுக்கான எச்சரிக்கை கேட்டால் கீவ் நகரில் உள்ள அமெரிக்கர்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல ஆயத்தமாக இருக்கவேண்டும்' என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை விடுத்துள்ள எச்சரிக்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்க ஆயுதங்களைப் பயன்படுத்தி ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால் உக்ரைனுக்கு எதிராக அணுவாயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தவும் புடின் அனுமதி வழங்கியுள்ளார். இதனால், உக்ரைனுக்குள் விரைவில் பாரிய அசாதாரண நிலை ஏற்படலாம் என்று நம்பப்படுகின்றது. (ம)

## பெயர்மாற்றம்

கைதடியில் வசிக்கும் நாகன் இிராணி ஆகிய நான் எனது பெயரை **நாகன் ஜீவராணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நாகன் ஜீவராணி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/56715) J-1

**நாகன் ஜீவராணி**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 01 . 01 . 1973



மறைவு 20 . 11 . 2024

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்ம பரிபாலன சபையின் செயலாளரும் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சை செயலாளருமான **சுப்பிரமணியம் சிறிகாந்தன்** அவர்களின் பாசமிகு மன்னவி

### சேது (சேரா) BA சிறிகாந்தன்

அவர்கள் காலமான செய்தி கேட்டு பெருந்துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

**சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
சைவ சமய அபிவிருத்திக் கழகம்.**

**சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
தர்மபரிபாலன சபையினர்.**

# கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 21

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் கார்த்திகை வாசம் மலர்முற்றக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடக்க விழா தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த.யுகேஸ் தலைமையில் இடம்பெறும். நிகழ்வில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தொடக்க உரை ஆற்றுவார்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர். சி.ரகுராம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-22-66)

## காணி விற்பனைக்கு

யாழ். வண்ணார்பண்ணை நாவலடி ஒழுங்கையில் 1 1/2 பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

(cs 56717) (N-1)

தொடர்பு: 077 873 8140
077 390 8137

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 09 . 1963



மறைவு 21 . 11 . 2016

அமரர்

### இராசரத்தினம் ரவிச்சந்திரன்

அப்பா ஆண்டுகள் எட்டு ஆனதோ
ஆறவில்லை எங்கள் துயரம்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொற் பேசி அறிவுரைகள் பல கூறி
எங்களுடன் வாழ்ந்த அப்பாவை
நாம் என்றென்றும் நினைந்திருப்போம்.

பிரிவால் துயருற்றிருக்கும்
மனைவி - சாந்தி
பிள்ளைகள் - கீர்த்தன், தூரிகா (ஜேர்மனி)

(28742) (N-1)

## மணப் பெண் தேவை

1. கொக்குவில் இந்து கௌரவகுலம் (V) 1988, அனுசம் MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை-27295
2. பொலிகண்டி-கரவெட்டி இந்து கௌரவம் (V) 1986 பூரம் BSc, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை-27669
3. கோப்பாய் இந்து கௌரவகுலம் (V), 1984, சதயம், MBBS Doctor UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை -32160
4. திருநெல்வேலி இந்து கௌரவகுலம் (V), 1990, விசாகம், MBBS Doctor UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை -32016.
5. K.K.S மாவிட்டபுரம் இந்து கௌரவகுலம் (K), 1988, ரோகினி, MSc, France மாப்பிள்ளைக்கு பெண்தேவை- 46157
6. சங்கானை இந்து கௌரவகுலம் (K), 1998 விசாகம் BA Hons), Accountant Germany + UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-34210
7. தெல்லிப்பளை-பருத்தித்துறை இந்து குருகுலம் 1996 சித்திரை Postgraduate in Managment Newzealand மாப்பிள்ளைக்கு பெண்தேவை- 36133
8. காரைநகர் இந்து கௌரவகுலம் (V) 1979, உத்திரம் Engineer, UK, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை-44887
9. மயிலிட்டி-கொக்குவில் இந்து கௌரவகுலம் (V), 1985, ரோகிணி, Dip in International Business Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை-39467

எம்மிடம் எல்லா ஜாதியிலும் உள்நாட்டு வெளிநாட்டு Unmarried, Divorce மணப்பெண்களும், மாப்பிள்ளைகளும் உண்டு.

S.Sharma J.P Phone - 077 539 3728
www.thaalee.com whatsApp - 077 803 8193


## விசாரிக்க...

என்று ஆராய்வதற்காக மத்திய சுகாதார அமைச்சால் தனியான குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு மன்னார் மருத்துவமனையில் நேற்றுக் காலைமுதல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் வடமாகாண சுகாதார அமைச்சையும் விசாரணைக்குள் உள்ளீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (அ-ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் ஆறுமுகம் இராசநாயகம்

தோற்றம் 11.10.1946

மறைவு 27.10.2024

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.11.2024) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 26.11.2024 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை,
077 959 5342

குடும்பத்தினர்

(cs. 56700) (N-1)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



பிறப்பு 02.09.1991

இறப்பு 23.10.2024

கடந்த 23.10.2024 அன்று அமரத்துவமடைந்த
எங்கள் அன்பு மகன்

### செந்திவேல் தமிழினியன் (இனியவன்)

(அங்கஜன் இராமநாதனின் உடுப்பிட்டி தொகுதி இணைப்பாளர் முன்னாள் நகரசபை உறுப்பினர், 2024 ஆம் ஆண்டு ஜனநாயக தேசிய கூட்டணியின் பாராளுமன்ற வேட்பாளர்)

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.11.2024) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் தங்களை கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெற்கொழு வைரவர் கோவிலடி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(cs 56714) (N)

# நாவலர் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.21

சைவபரிபாலனசபை நடத்தும் சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலனசபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலனசபையின் உப தலைவர் பி.என்.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ராஜசீலன் ஜமுனா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் சயனொளிபவன் முகுந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இளஞ் சைவப்புலவர் க.நித்திய பாபுதரன் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். நிகழ்வில் இந்துசாதனம் சஞ்சிகை வெளியீடு, மாணவர்களின் பேச்சு, நடன அரங்கு என்பன இடம்பெறும். (ச-66)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலட்டி உப அலுவலக
ஊழியர் நலன்புரிச்சங்க அங்கத்தவரான **திரு.மு. குகனேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்

### முத்தன் செல்வி

கடந்த 19.10.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மயிலிட்டி உப அலுவலகம்,**

(cr.43744) (N-1)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஊழியர் நலன்புரிச்சங்க அங்கத்தவரான
**திரு.மு. குகனேஸ்வரன்** அவர்களின் அன்புத் தாயார்


### முத்தன் செல்வி

கடந்த 19.10.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**

(cr.43742) (N-1)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 03.06.1980

மறைவு 19.11.2024

### அழகசுந்தரம் கிருபாகரன்

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன்

குழுமத் தலைவரும்,
பணியாளர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்...

நவம்பர் 27ஆம் திகதி 1982ஆம் ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளியான சங்கர் முதல் வித்தாக வீரமரணமடைந்தார். அந் நாளை மாவீரர் நாளாக 1989ஆம் ஆண்டில் தமிழீழத் தேசியத் தலைவர் அறிவித்தார். அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந் நாளில் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இவ்வருட நினைவேந்தல்களுக்காக ஏற்பாடுகள் முழுமைப்படுத்தப்பட்டு வருகின்றன. (அ-ம-66)

## தாய்,...

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் பிரசவத்துக்காகச் சேர்க்கப்பட்ட மன்னார் பட்டித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த வனஜா (வயது-28) என்ற இளம்தாயும், அவருடைய வயிற்றில் இருந்த சிசுவும் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர்.
மருத்துவத் தவறாலேயே இந்த இறப்புகள் சம்பவித்துள்ளன என்று குற்றஞ்சாட்டிய பொதுமக்களும், பெண்ணின் உறவினர்களும் நேற்றுமுன்தினம் முதல் மருத்துவமனைக்கு முன்பாக ஒன்றுகூடி வந்தனர். இதைத் தொடர்ந்தே இந்த இறப்புகளுக்கு நீதிகோரிப் போராட்டம் மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, நேற்று மாலை மருத்துவமனைக்கு முன்பாக கொட்டும் மழைக்குள் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஒன்றுதிரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்த இறப்புகளுக்கு நீதிவேண்டும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், மருத்துவமனை நிர்வாகம் மாற்றப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் வலியுறுத்தல்களையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.
போராட்டம் தீவிரம் பெற்றதைத் தொடர்ந்து மருத்துவமனைக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. பொலிஸார் பொதுமக்களைச் சமாதானம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் பயனளிக்காத நிலையில், கலகமடக்கும் பொலிஸாரும் மருத்துவமனை வளாகத்தில் குவிக்கப்பட்டனர். மன்னார் மாவட்டச் செயலர் உள்ளிட்ட பல தரப்பினரும் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் எந்தப் பயனும் ஏற்படவில்லை.
"எவருடைய சமாதானத்தையும் நாம் ஏற்கத் தயாரில்லை. குற்றவாளிகளைத் தப்பிக்க விடுவதற்காகவே எம்மிடத்தில் அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். சிந்துஜாவின் இறப்புக்கு இன்னமும் நீதிவழங்கவில்லை. அதுபோல்தான் வனஜாவின் இறப்பையும்மாற்றமுயற்சிக்கின்றனர்" என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மேலும் வலியுறுத்தினர். (அ-ம)

## பாதாளக்குழு...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து கடந்த மே மாதம் 30ஆம் திகதி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் வடமராட்சியை சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். மே மாதம் 31ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.
இதையடுத்து யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் குறித்த சந்தேகநபர், தான் பாதாள உலகக் குழுவின் தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா எனவும், அவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக பிரிந்து பூக்குடி கண்ணா என்பவருடன் இணைந்து செயற்பட்டு வந்ததாகவும், கஞ்சிப்பானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகி இருந்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவங்களால் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் அவர் பொலிஸாரிடம் கூறியிருந்தார்.
இதையடுத்தே, விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் இணைந்து பலத்த பாதுகாப்புடன் சிறைச்சாலை வாகனத்தில் அவர் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு நேற்று அழைத்து வரப்பட்டிருந்தார். பருத் தித்துறை நீதிமன்ற வளாகம் உள்ளிட்ட அண்மித்த பகுதிகள் விசேட பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிக் கப்பட்டதைத் தொடர்ந்து அவர் கடும் பாதுகாப்புடன் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டார். (அ-ம-100)

## விசாரணையை...

தவறுகள் நிகழ்ந்துள்ளன என்றும், இறப்பில் சந்தேகம் உள்ளதாகவும் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது, சில தினங்களுக்கு முன்பாகவே அந்த வழக்கு மன்னார் பிராந்தியக் குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, பாதிக்கப்பட்ட தரப்பினருக்காக நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி டெனீஸ்வரன் மற்றும் சுமிலன் டயஸின் கோரிக்கையை ஏற்று குறித்த வழக்குத் தொடர்பான விசாரணையை துரிதப்படுத்தி இரண்டு வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டது. டிசெம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-56-60)

## சோலர்...

களை முன்வைத்து வடமராட்சி தொண்டைமானாறு, நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் நால்வர் தனித்தனியான முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.
ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் சோலர் இணைப்பு அனுமதி வழங்கலில் முறைகேடுகள் காணப்படுவதாகவும், தாம் விண்ணப்பித்த ஒழுங்கின் படி தங்களுக்கு அனுமதி வழங்கப்படாமல், தங்களுக்குப் பிறகு விண்ணப்பித்தவர்களுக்குச் செல்வாக்கின் அடிப்படையில் அனுமதிகள் வழங்கப்பட்டதாகவும் ஜனாதிபதி செயலகத்துக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மின்வலு அமைச்சராகப் பதவி வகித்த நிலைமாறு காலத்தினுள் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு உடனடியாக இணைப்பு அனுமதியை வழங்குமாறு யாழ்ப்பாணப் பிராந்திய மின் பொறியியலாளருக்கு மின்வலு அமைச்சின் செயலாளர் பணித்திருந்தார். இப்போது, தமது அனுமதி விண்ணப்பத்துக்கு அங்கீகாரம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், செல்வாக்குமிக்க ஒரு சிலருக்கு மட்டும் அதிகளவான வலுப்பாவனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர்கள் முறையிட்டுள்ளனர்.
இதேநேரம், சோலர் இணைப்பைப் பெற்றுக் கொண்டுள்ள சில வாடிக்கையாளர்கள் வங்கி கடன் மூலம் சோலர் தொகுதியைப் பொருத்தி பல மாதங்கள் ஆகியுள்ள போதிலும், இணைப்புக்கான மீற்றரைப் பொருத்துவதில் மின்சாரசபை அசண்டையீனமாக வேண்டுமென்ற இழுத்தடிப்புச் செய்வதாகவும் இதனால் வங்கிக்கு மாதாந்தத் தவணைப் பணத்தைக் கட்டுவதற்குத் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-26)

## மாங்குளத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாவியிலிருந்து மாங்குளம் நோக்கிச் சென்ற மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
வன்னிவிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த சந்திரன் விதுசன் (வயது -20), புதிய கொலணி மாங்குளம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் விதுர்சன் (வயது -20) என்ற இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.
படுகாயமடைந்த மாங்குளம் பகுதியைச் சேர்ந்த மற்றைய இளைஞர் மாங்குளம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-35-555)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும்வாய்ப்புஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து தருவீர்கள்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேச்சில் பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கக்கூடும்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன்கடன்வாங்கவும்நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**சிம்மம் :** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அரசாங்கக் காரியங்கள் தாமதமாக முடியும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அலுவலகப் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** வீண் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடுவது நல்லது. வெளியிடங்களில்உணவு உண்பதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம் :** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச்சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல்ஆரோக்கியத்தில்கவனம்தேவை. சிலருக்குஎதிர்பாராதபயணங்களுக்குவாய்ப்பு

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது பொறுமையைக்கடைப்பிடிப்பது அவசியம். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மகரம்:** பிள்ளைகளால்பெருமை அடைவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். அலுவலகத்தில் பணிகள் அதிகரித்தாலும் சோர்வில்லாமல் செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன்–மனைவிக்கிடையேஅந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளால்பெருமைஉண்டாகும். சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்கு திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சகோதரர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல்நலனில் கவனம் தேவை.

# அரசமைப்பு விவகாரத்தை விட்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புக

## விஜயதாஸ ராஜபக்ச தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 21**

**அரசமைப்பு விவகாரத்தைவிடவும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

புதிய அரசமைப்புக்கான ஏற்பாடுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பிரதிநிதி, மக்கள் மற்றும் தேர்தல் தொகுதிக்குப் பொறுப்புக்கூறக்கூடிய வகையில் தேர்தல் முறைமை மாற்றப்படவேண்டும். செனட் சபை உருவாக்கப்பட வேண்டும். இவ்விரு விடயங்களை செய்வதற்குரிய அரசமைப்பு மறுசீரமைப்பு யோசனையை நான் முன்வைத்துள்ளேன்.

இதனைச் செய்யாவிடின், புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். புதிய அரசமைப்புக்குரிய பணிகளை முன்னெடுப்பதற்கு குறைந்தபட்சம் ஒரு வருடமாவது தேவை. அது தொடர்பில் மக்களுக்கு யோசனைகளை முன்வைப்பதற்கு மேலும் ஓர் ஆண்டு தேவை. நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துக்கு அப்பால் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும்.

புதிய அரசமைப்பு இயற்றப்படும் என அரசாங்கம் கூறி இருந்தாலும் எந்தக் கொள்கையின் அடிப்படையில் இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பது பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தற்போதும் நடைமுறையில் உள்ளது. இதற்கு புதிதாக சட்டம் இயற்ற வேண்டியதில்லை.

அரசமைப்பு மறுசீரமைப்பைவிடவும் பொருளாதாரம் பற்றி தற்போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் நாடாளுமன்றத்தை நடத்துவதுகூட சிக்கலாக மாறும் - என்றார். (ச-44)

*பலாலி*

# இராஜராஜேஸ்வரி அம்மனை தினமும் வழிபட அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 21

பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில், 34 வருடங்களின் பின்னர் மக்கள் தினமும் வழிபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மக்கள் வழிபடுவதற்கு அண்மையில் ரணில் அரசாங்கத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதன்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மக்கள் அங்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

இதன் தொடர்ச்சியாகவே, நேற்றுப் புதன்கிழமை முதல் அங்கு தினமும் சென்று வழிபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-66)



*16 வயதுப்பிரிவு கால்பந்தாட்டம்*

# மகாஜன மகளிர் அணி தேசியத்தில் சம்பியன்!

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 16 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனானது.

அநுராதபுரம் பொதுவிளையாட்டரங்கில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து காலி மாவட்ட ஹீனற்றிகல ஷரிபுத்திர கல்லூரி அணி மோதியது. இதன்போது மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-66)

**விற்பனையாளர் தேவை**

நல்லூரில் அமைந்துள்ள புடைவைக் கடை ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் உடன் தேவை.

**075 237 7463**

(CS/1898) J-1

**வேலையாட்கள் தேவை**

**பின்வரும் வேலைகளுக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.**

- **வெல்டிங்**
- **வாகனம் சேவிஸ் செய்தல்**

**077 901 8742**

(CS/56690) J-1

**பணிப்பெண் தேவை**

கொழும்பு இராஜகிரிய இல் குழந்தைப் பராமரிப்பு மற்றும் வீட்டுப் பணிகளுக்காக வீட்டில் தங்கியிருந்து பணிபுரிய தமிழ் பேசக்கூடிய பணிப்பெண் உடனடியாகத் தேவை. (சம்பளம் ரூ 45000, தங்குமிடம் மற்றும் 3 வேளை உணவு வழங்கப்படும்)

**077 048 5518**

(CS/56719) J-1

**விற்பனைக்கு/ வாடகைக்கு**

வவுனியா தோணிக்கள் சிவன் கோவில் வீதியில் அமைதியான கௌரவமான சூழலில் ஒருபக்கம் மதிலுடன் கூடிய உறுதிக்காணி 6 பரப்பு விற்பனைக்கு உண்டு. 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு.

**077 448 3052, 076 322 3687**

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 11 . 1939

இறப்பு 18 . 11 . 2024

**செல்லையா பாலசுப்பிரமணியம்**

(SBS Lucky Trade Centre (Grand Bazzar Jaffna), Bala Fancy House (Kayts),

பாலினி ஸ்ரோர்ஸ் ( காரைநகர்) - உரிமையாளர்)

வேலணை பள்ளம்புலத்தை பிறப்பிடமாகவும் காரைநகர் மாப்பாணவூரி, கனடா ரொரன்டோ ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (18.11.2024) திங்கட்கிழமை காரைநகரில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயமணியின் ஆருயிர் கணவரும், அமரர் மகேஸ்வரி, சோமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர் வைரவநாதன், செந்தில்நாதன், தனலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், சிவலோகநாதன், மகாதேவன், மகேஸ்வரன், ஜெயராணி, ஜெயபாலன், ஜெயவதனி, ஜெயரமேஸ், பாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தி, பவானி, மோகனா, பேரின்பராசா, சுபாங்கனி, மனோரஞ்சன், சாயினி, பிரசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன், பிரவீனா & கிருஷான், சரண்யன், அபிலாஸ், மயூரன், சாய் ஸ்ரேயா, சாய் நேத்திரா, மேதா, சாய் விசால், மதுரா, மாயோன், கவின், நேயா, ஆரா, அத்தினா, சித்தாரா, காயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மாப்பாணவூரியில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெற்று காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**தொடர்புகளுக்கு:**

ஜெயமணி - காரைநகர் - 021 225 2269,
மகாதேவன் - கனடா - 1 416 716 7052,
மகேஸ்வரன் -ஐக்கிய அமெரிக்கா- 1 626 353 9745,
ஜெயரமேஸ் - ஐக்கிய அமெரிக்கா - 1 929 245 4047,
பாலினி - கனடா - 1 289 242 4620
சிவலோகநாதன் - கனடா- 1 289 830 8494
ஜெயராணி - கனடா - 1 416 704 5199
ஜெயபாலன் - கனடா - 1416 451 0260
ஜெயவதனி - கனடா - 1 416 670 4676

(CS/1899) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org